செ.வெ.எண்: 159 நாள்:10.03.2018

திருநெல்வேலி மாவட்டம் புளியங்குடி நகராட்சியில புதியதாக கட்டப்பட்டுள்ள பயணிகள் காத்திருப்பு அறை, பயணிகள் நிழல்கூடை, சிறுவர் பூங்கா உள்ளிட்டவைகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் திறந்து வைத்தார்.

---

திருநெல்வேலி மாவட்டம் புளியங்குடி நகராட்சி பகுதியில் புதியதாக கட்டப்பட்ட பயணிகள் காத்திருப்பு அறை, பயனிகள் நிழல்கூடை, சிறுவர் பூங்கா திறப்பு நிகழ்ச்சி வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.மனோகரன் அவர்கள் தலைமையில் இன்று (10.03.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்துகொண்டு பல்வேறு திட்ட பணிகளை திறந்து வைத்தார்.

புளியங்குடி நகராட்சி பேருந்து நிலையத்தில் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட பயணிகள் காத்திருப்பகம், புளியங்குடி நகராட்சி டி.என் புதுக்குடியில் ரூ.10 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட பயணிகள் நிழல்கூடம், ஆகியவற்றையும் புளியங்குடி நகராட்சி அய்யாபுரம் பகுதியில் பொது நிதியிலிருந்து ரூ.13.50 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட அம்மா நினைவு சிறுவர் பூங்காவையும் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

தொடர்ந்து அய்யாபுரம் பகுதியில் பொதுமக்கள் பங்களிப்பு ரூ.5 லட்சம் மதிப்பில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணிகளையும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 70 வது பிறந்த நாளை முன்னிட்டு புளியங்குடி நகராட்சி பகுதியில் 7 ஆயிரம் மரக்கன்றுகள் நடவு செய்யும் பணிகளையும் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மரக்கன்று நடவு செய்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் புளியங்குடி நகராட்சி ஆணையாளர் திரு.பவுண்ராஜ், நகராட்சி பொறியாளர் திருமதி. புஸ்பலாதா, டான்பேட் துணைத் தலைவர் திரு.கண்ணன் (எ) ராஜூ,ஆவின் தலைவர் திரு.ரமேஷ், நெசவாளர் சங்கம் தலைவர் திரு.ஆறுமுகம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.சுப்பையாபாண்டியன், முக்கிய பிரமுகர்கள் திரு.மூர்த்தி பாண்டியன், திரு.வேல்முருகன், திரு.ஆறுமுகம், திருமதி.தேவகி, மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.